செ.கு.எண்:. 157 நாள்:- 1.11.2011.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 1.11.2011

1) தேனி மாவட்டம், **மஞ்சளாறு அணையிலிருந்து** தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடி பாசனத்திற்காக **2.11.2011 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சுமார் **5259 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) திருப்பூர் மாவட்டம், **அமராவதி அணையிலிருந்து** திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய பாசனப் பகுதிகளுக்கு சம்பா நெல் நடவுப் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய பாசனப் பகுதிகளுக்கு சம்பா நெல் நடவுப் பாசனத்திற்காக **2.11.2011 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள சுமார் **29,387 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்